In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 Prosecution witness P.W.12

Name: Mohan Sundararaj Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. Other Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் திருமலைசாமிபுரத்தில் வசிக்கிறேன். நான் இருசக்கர தனியார் வாகன கம்பெனியில் சேல்ஸ் மேனேஜராக பணியாற்றி வருகிறேன். 14.01.2022ம் தேதி நான் TN-57-AB-4655 என்ற ஷிப்ட் சிவப்பு கலர் காரை முருகேசன் என்பவரிடம் நான் ரூ.2,50,000க்கு கிரையம் பெற்றேன். அந்த வாகனத்தை நான் ஓட்டிக்கொண்டிருந்தேன். பெயர் மாற்றம் செய்வதற்கு முருகேசன் உரிய பாரத்தில் கையெழுத்து செய்து கொடுத்துவிட்டார். நான் என் தகப்பனார் இறந்துவிட்டதால் அச்சமயத்தில் என் பெயரில் மாற்றம் செய்ய இயலவில்லை. கார் சற்று பழுதடைந்திருந்ததால் விற்பனை செய்துவிடலாம் என நினைத்து செந்தில்குமார் என்பவருக்கு ரூ.2,40,000/-க்கு 30.04.2023ம் தேதி விற்பனை செய்துவிட்டேன். காவல்துறை துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

இருசக்கர வாகன தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் என்பதை காட்ட டிஎஸ்பியிடம் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் மேற்படி காரை எந்த தேதியில் வாங்கினேன் என்பதை குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரியல்ல.

அதேபோல் செந்தில்குமார் என்பவருக்கு எந்த தேதியில் காரை விற்றேன் என்பதையும் குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. முருகேசன் என்பவரிடம் காரை வாங்கியபோது அதற்கான ரசீதை போலீசார் விசாரணையின்போது கொடுக்கவில்லை என்றால் சரிதான். செந்தில்குமாருக்கு காரை விற்றதாக சொல்வதற்கும் எந்த விசாமான ஆவணமும் போலீசார் விசாரணையின்போது கொடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது மேற்படி கார் என் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.28 17:06:14 +0530

Principal District Judge,
Dindigul.